செ.வெ.எண்:11 நாள்:06.01.2018

**திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணி பெண்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வளையல்கள் அணிவித்து புத்தாடைகளை வழங்கினார்.**

------

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஏவிஆர்எம் கலையரங்கில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.01.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளையல்கள் அணிவித்து புத்தாடைகளை வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை வாரி வழங்கியுள்ளார்கள். பெண்களுக்கான திட்டங்களை பார்த்து, பார்த்து அதிக அளவில் செயல்படுத்தியுள்ளார்கள். கருவில் உள்ள குழந்தை முதல் அனைவருக்கும் பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். ஏழை எளிய கர்ப்பிணி தாய்மார்களை மகிழ்விக்க சமுதாய வளைகாப்பு திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள். மேலும் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்பட்ட மகப்பேறு உதவி தொகையை ரூ.18 ஆயிரமாக உயர்த்தினார்கள். பல்வேறு மருத்துவ பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படுகிறது. கர்ப்பிணி பெண்களுக்கு கர்ப்ப கால பராமரிப்புகள் குறித்து விழிப்புணர்வு புத்தகம் வழங்கப்படுகிறது. பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ பல திட்டங்களை செயல்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசி உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நிச்சயம் உண்டு. நீங்கள் அனைவரும் சிறப்பாக வாழ வாழ்த்தி விடைபெறுகிறேன். என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் இன்று 21 வட்டாரங்களில் 66 இடங்களில் 2,640 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்படுகிறது. 2012 - 13 ம் ஆண்டு முதல் 2015 - 16 வரை 4 ஆண்டுகளில் 14,520 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது. கர்ப்பிணி பெண்கள் கர்ப்ப காலத்தில் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இது கர்ப்பிணி பெண்களுக்கு மரியாதை செய்யும் நிகழ்ச்சியாகும். ஏழை எளிய வசதியற்ற குடும்பங்களில் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்த இயலாது என்பதால். தமிழக அரசு சமுதாய வளைகாப்பு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. கர்ப்பிணி அனைவரும் அவசியம் தொடர்ந்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். மகப்பேறு உதவித்தொகை தற்போது ரூ.18 ஆயிரம் வழங்கப்படுகிறது. இறுதி தவணை தொகை ரூ.6 ஆயிரம் தனியார் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரசவம் நடந்தாலும் பணம் கிடைக்கும். உங்களின் ஆரோக்கியம் தான் குழந்தையின் ஆரோக்கியமாகும். அடுத்த தலைமுறை சந்ததியினரை உருவாக்கும் நீங்கள் ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். என பேசினார்.

தொடர்ந்து கர்ப்பிணி பெண்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் பல்வகை கலவை சாதங்களை பரிமாறினார்கள்

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.ஜெய சூர்யா, சுகாதார பணிகள் துணை இயக்குநர் டாக்டர். சோமசுந்தரம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பணை இணைய துணைத்தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் கூட்டுறவு இணைய தலைவர் திரு.ஆறுமுகம், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையா பாண்டியன் சங்கரன்கோவில் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.மாரியம்மாள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.